**தேனி உதவி தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**முன்னிலை திரு.க.கிருஷ்ணன், எம்.ஏ.,எம்.எட்.,**

**ந.க.எண் 14 /அ1/2012, நாள்:05.01.2012.**

பொருள்: தொடக்கக் கல்வி– உதவிவிபறும் பள்ளிகள் – தேனி, மகாராஜா துவக்கப்பள்ளி, – எஸ்.சி.அருந்ததியா் இனச்சுழற்சி முறை திருமதி.கே.பிரியா என்பாரை **07.12.2011** முதல் நிரந்தரப் பணியிடத்தில் நியமனம் செய்தமை – **21.12.2011** முதல் பணித்துறப்பு செய்தமைக்கு ஒப்புதல் வழங்கிடக் கோரிய கருத்துரு – புகார்களின் அடிப்படையில் திருப்பியனுப்புதல் – சார்பு.

பார்வை:
1) தேனி, மகாராஜா தொடக்கப்பள்ளிச் செயலரின் கடிதம், நாள்:22.12.2011.
2) தேனி, மகாராஜா தொடக்கப்பள்ளியின் இடைநிலையாசிரியர், திருமதி.கே.பிரியா என்பாரின் குறைதீர் மனு, நாள்: இல்லை.
3) அம்பேத்கார் முன்னேற்றக் கழகம் நிறுவனத் தலைவர் திரு.எம்.எஸ்.மோகன்தாஸ் என்பாரின் கடிதம், நாள்**02.01.2012.**
4) ஆதிதிராவிடர் பேரவை, தேனி மாவட்டம், தலைவர் மற்றும் செயலரின் கடிதம், நாள்**03.01.2012**
5) தேனி, மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்**3752**/அ3/**2011** நாள்:05.**01.2012**

*****

பார்வை–1ல் காணும் கடிதத்தில், தேனி, மகாராஜா தொடக்கப்பள்ளியின் இடைநிலை ஆசிரியை திருமதி.கே.பிரியா என்பார், தனது குடும்பச் சூழ்நிலை காரணமாக **21.12.2011**பி.ப. முதல் தனது பணியை பணித்துறப்பு (Resignation) செய்வதாகவும், அதற்கு அவ்வாசிரியையின் சம்மதக்கடிதத்துடன் கூடிய கருத்துரு அனுப்பியுள்ளதாகவும், எனவே அப்பணித்துறப்பிற்கு ஒப்புதல் வேண்டி கருத்துரு சமா்ப்பிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் குறைதீா் மனுவில் மேற்கூறிய ஆசிரியா் திருமதி.கே.பிரியா என்பார் தனக்கு அப்பள்ளியிலேயே தொடா்ந்து பணியாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்த் தெரிவித்துள்ளார். மேலும், அன்னார் கடந்த **02.01.2012**–ல் தேனி, உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தந்தபோது நேரடியாக விசாரித்தபோதும் தான் அப்பள்ளியிலேயே பணியாற்ற விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இதே கருத்தை வலியுறுத்தி பார்வை–3 மற்றும் 4ல் காணும் கடிதங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேனி, முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் அறிவுரையின் பேரில் தேனி, மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரால் 04.01.2012 அன்று தேனி, நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிச் செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியரான திருமதி.கே.பிரியா என்பாரிடமும் நேரடியாக விசாரணை செய்யப்பட்டது. அதனடிப்படையில் பார்வை 5ல் காணும் தேனி, மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகளில் குறிப்பிட்டவாறு தேனி, மகாராஜா தொடக்கப்பள்ளியில் பணியாற்றி வந்த திருமதி.கே.பிரியா என்பாரின் பணித்துறப்புக்கு ஒப்புதல் கோரிய பள்ளிச் செயலரின் கருத்துரு திருப்பியனுப்பப்படுவதுடன், மேற்கூறிய ஆசிரியர், திருமதி.கே.பிரியா என்பாரை மீண்டும் பணியில் சேர்த்து தொடர்ந்து பணியாற்றிடும் வகையில் இரு நாட்களுக்குள் உரிய ஆணை வழங்கிடத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செயலர் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு
பார்வை 5ல் காணும் மாவட்டத் தொடக்கக் கல்வி
அலுவலரின் செயல்முறைக் கடிதம்

5/1/12

உதவி தொடக்கக் கல்வி அலுவலர்,
தேனி.

பெறுநர்
செயலர்,
மகாராஜா தொடக்கப்பள்ளி, தேனி.

நகல்

1) தேனி, முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
2) தேனி, மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
3) திருமதி.கே.பிரியா, இடைநிலை ஆசிரியர், மகாராஜா தொடக்கக்கப்பள்ளி, தேனி.
4) திரு.எம்.மேகான்தாஸ், நிறுவனத்தலைவர், அம்பேத்கார் முன்னேற்றக் கழகம் மதுரை,
5) தலைவர் மற்றும் செயலர், ஆதிதிராவிடர் தமிழர் பேரவை, அல்லிநகரம்.

**தேனி மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,**
**ந.க.எண்.3752/அ.3/2011, நாள்.05.01.2012.**

பொருள்– தொடக்கக் கல்வி – உதவிபெறுபவை – தேனி சரகம், தேனி, மகாராஜா தொடக்கப் பள்ளியில் இடைநிலையாசிரியராக திருமதி.கே.பிரியா என்பார் நியமிக்கப்பட்டமை – திருமதி.கே.பிரியா என்பாரை பள்ளி நிர்வாகம் வற்புறுத்தி பணிவிலகல் பெற்றதாகப் புகார் பெறப்பட்டமை – 04.01.2012 அன்று நேரில் விசாரணை செய்யப்பட்டமை – விசாரணை அறிக்கை பணிந்தனுப்புதல் – சார்பு.

பார்வை– 1.மதுரை–07, அம்பேத்கார் முன்னேற்ற கழகத்திலிருந்து மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்ட புகார் மனு.
2.தேனி, முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட அறிவுரைகள் 03.01.2012.

*******

தேனி சரகம், தேனி, மகாராஜா தொடக்கப் பள்ளியில் எஸ்.ஸி.,அருந்ததியர் பணியிடத்தில் திருமதி.கே.பிரியா என்பார் பணி நியமனம் செய்யப்பட்டு, பள்ளி நிர்வாகம் திருமதி.கே.பிரியா என்பாரை வற்புறுத்தி பணிவிலகல் கடிதம் பெற்றதாக புகார் மனு தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பார்வை 1–ல் காணும் கடிதம் வாயிலாக அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புகார் மனு தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை அனுப்பிவைத்திடுமாறு, தேனி, மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருக்கு, தேனி, முதன்மைக் கல்வி அலுவலரால் அறிவுரை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, 04.01.2012 அன்று, தேனி, நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிச் செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியரான திருமதி.கே.பிரியா என்பாரிடமும் நேரிடையாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்விசாரணையில் பள்ளிச் செயலர் தெரிவித்துள்ள விளக்கங்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லையென்பதால், திருமதி.கே.பிரியா என்பாரை தேனி, மகாராஜா தொடக்கப் பள்ளியில் தொடர்ந்து இடைநிலையாசிரியர் பணியிடத்தில் பணிபுரிந்திட அனுமதிக்க வேண்டும் என பள்ளிச் செயலருக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இதுபோன்ற புகார்கள் இனி வருங்காலங்களில் வராத வண்ணம் செயல்படுமாறு பள்ளிச் செயலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

திருமதி.கே.பிரியா என்பார் 21.11.2011 அன்று தன் பதவியை இராஜினாமா செய்வதாக அளித்துள்ள கடிதத்தினை அடிப்படையாக வைத்து, அன்னாரின் பணி விலகலுக்கு ஒப்புதல் பெற வேண்டி கருத்துருக்கள் ஏதும் பெறப்பட்டிருப்பின், அக்கருத்துருவினை உடனடியாக திருப்பி அனுப்பிவிட்டு, திருமதி.கே.பிரியா என்பார் தொடர்ந்து பள்ளியில் பணிபுரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ள இதன் மூலம் தேனி, உதவித் தொடக்கக் கல்வி அலுவலரைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5.1.12

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்,
தேனி.

05/01/12

பெறுநர்
1. உதவித் தொடக்கக் கல்வி அலுவலர், தேனி.
2. பள்ளிச் செயலர், மகாராஜா தொடக்கப் பள்ளி, தேனி.

நகல்– முதன்மைக் கல்வி அலுவலர்,
தேனி– பணிந்தனுப்பப்படுகிறது.